सत्यमेव जयते

भारत का राजपत्र

# The Gazette of India

இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

**பகுதி XV பிரிவு 1**

प्राधिकार प्रकाशित

**PUBLISHED BY AUTHORITY**

**அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது**

नई दिल्ली, सोमवार, 6 मार्च, 2000/1922 सका

New Delhi, Monday, 6th March 2000/1922 Saga

புது தில்லி, 2000, மார்ச் 6ஆம் நாள் திங்கட்கிழமை/1922 சக

**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department), New Delhi

சட்ட, நீதி மற்றும் நிறுமம அலுவல்கள் அமைச்சகம் (சட்டமியற்றுத் துறை), புதுதில்லி

The translation in Tamil of the Judicial Officers Protection Act, 1850 (18 of 1850), The Powers of Attorney Act, 1882 (7 of 1882), The Prevention of Seditious Meetings Act, 1911 (10 of 1911), The Destructive Insects and Pests Act, 1914 (2 of 1914), The Collections of Statistics Act, 1953 (32 of 1953), The State Armed Police Forces (Extension of Laws) Act, 1952 (63 of 1952), The Foreign Jurisdiction Act, 1947 (47 of 1947), are hereby published under the Authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under Clause (a) Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

நீதித்துறை அலுவலர்கள் பாதுகாப்புச் சட்டம், 1850 (18/1850), பகர அதிகாரஆவணச் சட்டம், 1882 (7/1882), அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சிக் கூட்டங்கள் தடுப்புச் சட்டம், 1911 (10/1911), அழிவு செய்யும் பூச்சிகள் மற்றும் நாசகாரப் பூச்சிகள் சட்டம், 1914 (2/1914), புள்ளி விவரங்களைத் தொகுத்தல் சட்டம், 1953 (32/1953), மாநில ஆயுதக் காவற்படைகள் (சட்டங்கள் நீட்டிப்பு) சட்டம், 1952 (63/1952), அயல்நாட்டு அதிகாரவரம்புச் சட்டம், 1947 (47/1947), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு, குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன்பிரிவு 2இன் கூறு (அ) இன்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல்வேண்டும்.

[Price Rs. 22.00]

# பகர அதிகாரஆவணச் சட்டம், 1882

**(சட்ட எண் 7/1882)**

[1882, பிப்ரவரி 24]

## பகர அதிகாரஆவணம் தொடர்பான சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம்

பகர அதிகாரஆவணம் தொடர்பான சட்டத்தைத் திருத்தும் நோக்கத்திற்காக ஈங்கிதனால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுகிறது:-

குறுந்தலைப்பு.

1. இந்தச் சட்டம், பகர அதிகாரஆவணச் சட்டம், 1882 என்று வழங்கப்பெறும்.

வட்டார அளாவுகை மற்றும் தொடக்கம்.

இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்; மற்றும் இது 1882, மே முதல் நாளன்று செல்லாற்றல் பெறும்.

பொருள் வரையறை.

1(அ). இந்தச் சட்டத்தில்,"பகர அதிகாரஆவணம்" என்பது, ஒரு முறையாவணத்தை எழுதிக் கொடுக்கிற ஒருவருக்காகவும், அவரது பெயரிலும் செயற்படுவதற்குக் குறித்துரைக்கப்பட்ட ஒருவருக்கு அதிகாரமளிக்கிற முறையாவணம் எதனையும் உள்ளடக்கும்.

பகர அதிகார ஆவணத்தின் படி எழுதிக் கொடுத்தல்.

2. ஓர் அதிகாரஆவணத்தைப் பெறுபவர், தான் தக்கதெனக் கருதினால், அவருடைய சொந்தப் பெயரிலும் அவரது கையொப்பத்துடனும், முத்திரை வேண்டுறுத்தப்படுகிறவிடத்து அவருடைய சொந்த முத்திரையுடனும், அந்த அதிகாரத்தை அளிப்பவருடைய அதிகாரஅடைவின் வழியாக, முறையாவணம் எதனையும் எழுதிக் கொடுக்கலாம் அல்லது செயல் எதனையும் செய்யலாம்; மற்றும் அவ்வாறு எழுதிக் கொடுக்கப்பட்ட முறையாவணம் ஒவ்வொன்றும் செய்யப்பட்ட செயல் ஒவ்வொன்றும், அந்த அதிகாரத்தையளிப்பவரின் பெயரிலும் கையொப்பம் மற்றும் முத்திரையுடனும் அந்த அதிகாரத்தைப் பெறுபவரால் எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தது அல்லது செய்யப்பட்டிருந்தது போன்றே சட்டத்தின் விளைவை உடையது ஆகும்.

இந்தப் பிரிவு, இந்தச் சட்டம் செல்லாற்றல் பெறுவதற்கு முன்போ பின்போ எழுதிக் கொடுக்கப்பட்ட முறையாவணங்களால் உருவாக்கப்பட்ட பகர அதிகார ஆவணத்துக்குப் பொருந்தும்.

அதிகாரத்தின் படியான பகர அதிகாரம் பெற்றிருப்பவரால், இறப்பு பற்றிய அறிவிப்பு முதலியன இல்லாமல் செய்யப்பட்ட செலுத்தம் செல்லுவதாகும்.

3. ஒரு பகர அதிகாரஆவணத்தை அடியொற்றி நல்லெண்ணத்தால் செலுத்தம் அல்லது செயல் எதனையும் செய்கிற எவர் ஒருவரும், அந்தச் செலுத்தத்திற்கு அல்லது செயலுக்கு முன்பு அதிகாரத்தை அளிப்பவர் இறந்துவிட்டிருந்து அல்லது பித்துப்பிடித்தவராகியிருந்து, நொடிப்பு நிலையராகியிருந்து அல்லது அந்த அதிகாரத்தைப் பின்னறவு செய்திருந்து, அந்த இறப்பு, பித்துப்பிடித்த நிலை, நொடிப்பு நிலை அல்லது பின்னறவு பற்றிய பொருண்மையானது, செலுத்தம் செய்கிற அல்லது செயலைச் செய்கிற நேரத்தில், அதனைச் செலுத்துகிறவருக்கு அல்லது செய்கிறவருக்குத் தெரியாமலிருந்தது என்றால், அந்தக் காரணத்தினால் அந்தச் செலுத்தம் அல்லது செயல் பொறுத்துக் கடப்பாடுடையவர் ஆவார்.

ஆனால், இந்தப் பிரிவு, அவ்வாறு செலுத்தப்பட்ட பணம் ஏதொன்றிலும் உரித்தமுடைய ஆள் எவரிடமிருந்தும், பணம் பெற்றவருக்கு எதிரான உரிமை எதனையும் பாதித்தலாகாது; மற்றும் அந்த ஆள், தம்மால் அந்தச் செலுத்தம் செய்யப்பட்டிராதிருந்தால் பணம் கொடுப்பவருக்கு எதிராகத் தாம் பெற்றிருக்கக்கூடிய அதே தீர்வழியை, பெற்றுக்கொள்பவருக்கு எதிராக அவர் கொண்டிருப்பார்.

இந்தப் பிரிவு, இந்தச் சட்டம் செயலுக்கு வந்த பின்பு செய்யப்பட்ட செலுத்தங்களுக்கும், செயல்களுக்கும் மட்டுமே பொருந்தும்.